**தமிழ்நாடு அரசு**

**மீன்வளத்துறை**

**மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணியில் சேருவதற்கான போட்டித் தேர்வில் சிறப்பிக்க ஆயத்த பயிற்சி அளித்தல்**

மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை) அவர்கள் 11.07.2017 அன்று சட்ட பேரவையில் அறிவித்ததன்படி மீன்வளத்துறை மற்றும் சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் (அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான பயிற்சி நிலையம்) இணைந்து ஆண்டுதோறும் 20 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்திய குடிமைப்பணிக்கான போட்டித் தேர்வில் கலந்துக்கொள்ள ஏதுவாக பிரத்யேக பயிற்சி அளித்திடும் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசு பட்டதாரி இளைஞர்கள் இப்பயிற்சி திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். விண்ணப்ப படிவம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் இணைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் மீன்துறை இணைய தளத்தில் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ **19.02.2021 பிற்பகல் 5.00 மணிக்குள்** விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் இத்திட்டம் குறித்த கூடுதல் விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் /துணை இயக்குநர்கள்/ இணை இயக்குநர்கள் அலுவலகங்களை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

**<u>மீனவ சமுதாயத்தை சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணியில் சேர்வதற்கான போட்டித் தேர்வின் பயிற்சியில் கலந்து கொள்வதற்கு வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

i) பயனாளிகள் மீனவ சமுதாயத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ii) பயனாளியின் பெற்றோர் / பாதுகாப்பாளர் மீனவ கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருக்கவேண்டும்.

iii) பயனாளியின் பெற்றோர் / பாதுகாப்பாளர் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கவேண்டும்.

iv) பயனாளியின் வயது 01.02.2021–ல் உள்ள படி 21 முதல் 32 வயது வரையில் இருக்க வேண்டும்.

v) மிகவும் பிற்படுத்தப்பட்ட (Most Backward Class) இனமாக இருந்தால் வயது வரம்பு 35 வரையிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் (SC/ST) இனமாக இருந்தால் வயது வரம்பு 37 வரையிலும் மாற்றுத்திறனாளியாக இருப்பின் வயது வரம்பு 42 வரையிலும் இருக்கலாம்.

vi) பயனாளிகள்அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பு பயின்று இருக்கவேண்டும்.

vii) பயனாளிகள் பள்ளி கல்வியில் (பன்னிரெண்டாம் வகுப்பில் 1000–க்கு மேல்) 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று இருக்க வேண்டும்.

viii) பயனாளிகள் படிப்பு முடித்து வேறு பணிகளில் பணிபுரிந்து வந்தாலும் தகுதியிருப்பின் இந்தியகுடிமைப் பணியில் சேர்வதற்கான ஆயத்த பயிற்சியில் கலந்துகொள்ளலாம்.

**தமிழக அரசு / Government of Tamil Nadu**
**மீன்வளத்துறை / Fisheries Department**

**<u>இந்திய குடியுரிமைப் பணியில் சேர்வதற்காக நடைபெறும் போட்டி தேர்வில் கலந்து கொள்வதற்கு, மீனவர்களின் வாரிசுகள் தேர்வு செய்யப்பட்டு அகில இந்திய குடிமை பணிகளுக்கான பயிற்சி நிலையம் மூலம் அளிக்கப்படவிருக்கும் சிறப்பு பயற்சி வகுப்பிற்கு அனுமதி கோரும் விண்ணப்ப படிவம்</u>**

**<u>Application for imparting Special Training to the wards of Fishermen to join Indian Civil Services.</u>**

| விண்ணப்பதாரரின் சமீபத்திய புகைப்படம்<br><br>Recent passport size photograph to be affixed here |
|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | | விண்ணப்பதாரர் பெயர் (பெரிய எழுத்துக்களில்)<br>Name of the Candidate (in capital letters) | |
| 2 | (அ) | பிறந்த தேதி (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)<br>Date of Birth (Proof to be attached) | |
| | (ஆ) | வயது 01.02.2021 அன்று உள்ளவாறு<br>Age as on 01.02.2021 | |
| 3 | | பெற்றோர் / பாதுகாவலரது பெயர்<br>Name of parent / Guardian | |
| 4 | | இனம் / Nationality | |
| 5 | | மதம் /Religion | |
| 6 | | ஜாதி (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)<br>Community (Certificate to be attached) | |
| 7 | | அடையாள அட்டை எண். (ஆதார் / குடும்ப அட்டை இணைக்கப்பட வேண்டும்)<br>Identity Card No. (Adhar / Family Card to be attached) | |
| 8 | | தொடர்பு முகவரி /Address for communication | |
| 9 | | தொலை பேசி எண்/கைபேசி எண்/மின்னஞ்சல் முகவரி<br>(Telephone No./Mobile No./Email ID | |
| 10 | | கல்வி தகுதி (Education Qualification) | |
| 11 | | மீனவ /மீனவ மகளிர் கூட்டுறவு சங்க பெயர்<br>(Fishermen / Fisherwomen Society Name) | |
| 12 | | மீனவ / மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர் எண்.<br>(Fishermen / Fisherwomen Society No) | |
| 13 | | மீனவ நலவாரிய அட்டை எண். (அட்டை இணைக்கப்பட வேண்டும்) (Fishermen Welfare Board Card to be attached) | |

| மேலொப்பமிடுபவர்<br><br>சம்பந்தப்பட்ட மீன்துறை ஆய்வாளர் / மீன்துறை உதவி இயக்குநர் |
|---|

விண்ணப்பதாரரது கையொப்பம்
Signature of the Candidate